சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 12.06.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். NC 195/E/2022 (SA 13600/E/2021)**

திரு.R.மயில்சாமி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
மதுரை வடக்கு வட்டம்,
மதுரை மாவட்டம்.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 21.08.2025 மற்றும் 29.10.2025 ஆகிய தேதியிட்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. 21.08.2025 தேதியிட்ட உத்தரவின் விபரம் பின்வருமாறு:-

a) இவ்வழக்கில் மனுதாரர் சட்டப் பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல் தொடர்பாக 23.11.2021 தேதியிட்டு இவ்வாணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, விசாரணையின் முடிவில், *இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள 4 இனங்களுக்கான தகவல்களை சட்டப் பிரிவு 7(6)-ன்படி மனுதாரருக்கு வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு* ஆணையத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

b) மேற்படி உத்தரவிற்கிணங்க 25.01.2022 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக 4 இனங்களுக்கான தகவல் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

c) வழங்கப்பட்ட தகவல்களில் இனம்-2-ல் புதுவிளாங்குடி II பிட் கண்மாயிலிருந்து வெளிவரும் தண்ணீர் 12, வாய்க்கால்களை ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானங்கள் கட்டியவர்களின் பெயர் மற்றும் முகவரி குறித்த

தகவலுக்கு, விளாங்குடி II பிட் கிராம கணக்குகளில் புல எண்கள் 79, 80, 81 மற்றும 47-ல் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு விவசாய பணி நடைபெற்ற போது புதுவிளாங்குடி II பிட் கண்மாயிலருந்து நன்செய் நிலங்களுக்கு வாய்க்கால் மூலம் நீரைப்பயன்படுத்தி விவசாயம் நடைபெற்று வந்த நிலையில் தற்போது மேற்படி புல எண்கள் தரிசு நிலங்களாகவும், பிளாட் மனையிடங்களாகவும் மாற்றப்பட்டு தனியர்களின் அனுபோகத்தில் உள்ளதாகவும், கிராம கணக்குகளில் மேற்படி புல எண்களில் செல்லும் வாய்க்கால்கள் பட்டா நிலத்தில் செல்லும் பாசன வாய்க்கால்களாகவே உள்ளது எனவும், தனியான உட்பிரிவுடன் கூடிய வாய்க்கால்கள் இல்லை எனவும், மேற்படி கிராமத்தில் உள்ள அய்யப்பன் தெரு, மெய்யப்பன் நகரில் செல்லும் Layout பாதைகள் வீடுகளின் முன்புறமாக சிறு செடிகள் வளர்த்தும், கழிவு நீர்த்தொட்டி அமைத்தும் உள்ளது எனவும், மேற்படி பாதை இனங்கள் கிராம வரைபடத்தின் படி தனியான உட்பிரிவுகள் இல்லை எனவும் தற்போதுவரை தனிநபர்கள் பெயரில் பட்டா நிலமாகவே உள்ளது எனவும், எனவே மேற்படி ரோடு மதுரை மாநகராட்சி பராமரிப்பில் உள்ளது எனவும் உதவி ஆணையர், மதுரை மாநகராட்சி, மதுரை மேற்கு மண்டலம் அவர்களுககு 29.11.2021 அன்று கடித வரைவு அனுப்பப்பட்டுள்ளதாகவும் (நகல் இணைக்கப்பட்டு) மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

d) ஆனால், மனுதாரர் மேற்படி விளாங்குடி கண்மாய் புல எண்.2/1-ல் இருந்து வெளிவரும் 12 வாய்க்கால்களில் ஆக்கிரமிப்பு உள்ளதாகவும், ஆக்கிரமிப்புகள் உள்ள வீட்டு உரிமையாளர் பெயர் மற்றும் முகவரி வழங்குமாறு எழுத்து மூலமாக அன்றைய (21.08.2025) விசாரணையின்போது கோரியுள்ளார்.

e) மேற்படி வாய்க்காலில் ஆக்கிரமிப்பு உள்ளதா, இல்லையா என்பது குறித்த தகவலை மனுதாரருக்கு வழங்கும் பொருட்டு கூடுதல் கால அவகாசம் வழங்குமாமற்று பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தைக் கோரியிருந்தார்.

f) பொதுத் தகவல் அலுவலர், இவ்வழக்கில் மனுதாரர் குறிப்பிடும், விளாங்குடி கண்மாய் புல எண்.2/1-ல் இருந்து வெளிவரும் 12 வாய்க்கால்களில் ஆக்கிரமிப்பு உள்ளதா, இல்லை என்பது குறித்த தகவலை, <u>அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன்,</u> ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 30.10.2025 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.**

3. **மேற்படி உத்தரவின்படி, 29.10.2025 அன்று பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி,** *இவ்வாணையத்தின் 21.08.2025 தேதியிட்ட உத்தரவின்படி, ந.க.எண்.7568/2025/ஆ5, நாள் 27.10.2025 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக மதுரை வடக்கு வட்டம், சாத்தமங்கலம் உள்வட்டம், விளாங்குடி பிட்-2 கிராமம், புல எண்.2/1-ல் உள்ள விளாங்குடி கண்மாய் மற்றும அதனுடைய நீர்வரத்து 12- வாய்க்கால்கள் ஆகிய புலத்தில் உள்ள ஆக்கிரமிப்பு தொடர்பாக அதிநவீன நில அளவை கருவிகளைக் கொண்டு 04.11.2025 அன்று சம்மந்தப்பட்ட நபர்களுக்கு தகவல் அறிவிப்பு செய்யப்பட்டு நில அளவைப்பணி நடைபெற உள்ளதாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.*

4. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனை செய்து 29.10.2025 அன்று கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

**a)** நிலஅளவைப்பணி மீதான உரிய அலுவலர்களிடம் அறிக்கையினை பெற்று மனுதாரருக்கு தகவலாக, அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 26.12.2025 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.**

5. அதன்படி இவ்வழக்கு குறித்து இவ்வாணையத்தில் உள்ள ஆவணங்களை 10.06.2026 அன்று பரிசீலித்ததில் இவ்வாணையத்தின் 21.08.2025 மற்றும் 29.10.2025 தேதியிட்ட உத்தரவு பொதுத் தகவல் அலுவலரால் நிறைவேற்றப்படவில்லை என தெரியவருகிறது.

6. ஆகவே **முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், மதுரை வடக்கு வட்டம்** அவர்கள் இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கு தொடர்பான இவ்வாணையத்தின் 21.08.2025 மற்றும் 29.10.2025 ஆகிய தேதிகளிட்ட உத்தரவுகளை முழுமையாக நிறைவேற்றி, மேற்கூறியுள்ள ஆணைகளில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரருக்கு தகவல்களை, கட்டணம் ஏதுமின்றி, அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 30.07.2026 அன்று தவறாமல் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், மதுரை வடக்கு வட்டம் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

7. 29.10.2025 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவினை நிறைவேற்றத் தவறிய பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், சட்டப் பிரிவு 20(2)-ன்கீழ் துறைவாரி நடவடிக்கை மேற்கொள்ள ஏன்

பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினை பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து அவ்வறிக்கையினை **இவ்வாணையத்தில் 30.07.2026 அன்று தவறாமல் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், மதுரை வடக்கு வட்டம் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**

8. மேற்குறித்த உத்தரவுகளை நிறைவேற்ற தவறும் பட்சத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவுகளின் கீழான நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என்று முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், மதுரை வடக்கு வட்டத்திற்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**
**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 195/E/2022 (SA 13600/E/2021)</u>**
**<u>பெறுநர்</u>**

வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மதுரை வடக்கு வட்டம், மதுரை.

பொதுத் தகவல் அலுவலர்/ (29.10.2025 அன்று பணியாற்றி அலுவலர்)
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மதுரை வடக்கு வட்டம், மதுரை.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**
திரு.R.மயில்சாமி, த/பெ.இராமலிங்கம்,
பிளாட் 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி, மதுரை - 18.

Copy to: File MP/PA,